# மறைந்திருக்கும் காசநோய்க்காக ஐக்கிய ராச்சியத்தில் பரிசோதனை

உங்களுடைய நுரையீரலில் டிபி இல்லை என்பதை உங்களது மார்பு எக்ஸ்-ரே காட்டுகிறது. இது ஒரு நல்ல செய்தி. இப்பொழுது நீங்கள் ஐக்கிய ராச்சியத்துக்கான விசாவுக்கு விண்ணப்பிப்பதுடன், மறக்காமல் உங்களுக்கு டிபி இல்லை என்பதற்கான சான்றையும் இணைக்கவும்.

**இருப்பினும் நீங்கள் ஐக்கிய ராச்சியத்தை வந்தடைந்த பிறகு உங்களுக்கு டிபி உண்டாகலாம் என்பதை அறிந்துகொள்வது முக்கியம்.**

இதற்குக் காரணம் 4 பேரில் ஒருவரது உடலில் டிபி பாக்டீரியா உறங்கும் நிலையில் இருக்கும் – இது ‘மறைந்திருக்கும் டிபி’ எனப்படுகிறது. மார்பு எக்ஸ்-ரே எடுப்பதால் மறைந்திருக்கும் டிபி புலப்படாது, எனவே நீங்கள் அறியாமலே உங்கள் உடலில் மறைந்திருக்கும் டிபி இருக்கலாம். மறைந்திருக்கும் டிபி எப்பொழுது வேண்டுமானாலும் செயல்படத்துவங்கி, உங்களை உடல்நலம் குன்றச் செய்யலாம். இருப்பினும், நீங்கள் ஐக்கிய ராச்சியத்தில் வசிக்கத் தொடங்கும் முதல் சில வருடங்களில் அது செயல்படத்துவங்கி உங்களை உடல்நலம் குன்றச் செய்வதற்கான சாத்தியம் அதிகம்.

## செயல்திறமான **டிபி**

அறிகுறிகள்:
**இருமல், காய்ச்சல், எடை இழப்பு, பசியின்மை, இரவில் வியர்த்தல், களைப்பு**



- டிபி பாக்டீரியா ”விழிப்புடன் உள்ளது”
- நீங்கள் உடல்நலமின்றி உணர்வீர்கள்
- நீங்கள் டிபியை மற்றவர்களுக்குப் பரப்பக்கூடும்

## மறைநிலை **டிபி**

**செயல்திறமான டிபி உருவாவதற்கு 10-இல் 1 வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது**



- டிபி பாக்டீரியா ”உறங்கிக் கொண்டிருக்கிறது”
- நீங்கள் உடல்நலமின்றி உணர மாட்டீர்கள்
- நீங்கள் டிபியை மற்றவர்களுக்குப் பரப்ப மாட்டீர்கள்

TB a!ert

டிபி அலர்ட் என்பது டிபி நோயால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள்வதற்காக பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்து மற்றும் நேஷனல் ஹெல்த் சர்வீஸ் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும் ஐக்கிய ராச்சியத்தின் தேசிய டிபி அறக்கட்டளை ஆகும். மறைந்திருக்கும் டிபி குறித்து பின்வரும் இணைய முகவரியில் மேலும் அறியலாம் www.thetruthabouttb.org/latent-tb

அதிர்ஷ்டவசமாக, மறைந்திருக்கும் டிபி உங்கள் உடல் நலத்தைக் குன்றச் செய்யும் முன், அதை ஆண்டிபயாடிக் மருந்துகள் கொண்டு சிகிச்சையளிக்க முடியும்.

ஐக்கிய ராச்சியத்துக்குள் வந்தடைந்த பிறகு நீங்கள் பொது மருத்துவர் அல்லது ‘ஜிபி’ எனப்படும் நேஷனல் ஹெல்த் சர்வீஸ் (என்எச்எஸ்) (NHS) குடும்ப மருத்துவர் ஒருவரிடம் பதிவு செய்துகொள்ளலாம். மறைந்திருக்கும் டிபி உங்களுக்கு இருக்கிறதா என்று சோதிக்க உங்களது பொதுமருத்துவர் உங்களுக்கு ஒரு இரத்தப் பரிசோதனை செய்யலாம். உங்களுக்கு மறைந்திருக்கும் டிபி இருப்பின், பாக்டீரியாவைக் கொல்ல உதவவும், உங்களது எதிர்கால ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் உங்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்.

இந்தச் சோதனையும், சிகிச்சையும் இரகசியமானவை மற்றும் கட்டணமில்லாதவை, மேலும் அது உங்களது விசா நிலையையோ, ஐக்கிய ராச்சியத்தில் தங்குவதற்கான உங்களது உரிமையையோ பாதிக்காது.

**பொது மருத்துவர் ஒருவரிடம் பதிவு செய்ய உங்களுக்கு நினைவூட்ட அல்லது உங்களிடம் டிபியின் அறிகுறிகள் தோன்றினால் விரைவாக ஒரு மருத்துவரைக் காணவும் இந்தத் துண்டறிக்கையைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.**




பின்வரும் இணைய முகவரியில் உங்களுக்கு மிக அருகில் உள்ள பொது மருத்துவரைக் காணலாம்
www.thetruthabout**tb**.org/FindaGP